செ.வெ.எண்: 42 நாள்: 25.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

**ஊரக வளர்ச்சித்துறை மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

ஊரக வளர்ச்சித்துறை மூலம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.09.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடங்கள் மேம்படுத்தும் திட்டம் (RCSIDS 2019-20) திட்டம், தேசிய கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதி திட்டம் (MLACDS), பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (MPLADS), ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் (SCPAR SCHEME), நபார்டு திட்டத்தின் கீழ் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TNRRIS), மூலதன நிதி திட்டம் (CGF), மற்றும் பசுமை வீடுகள் கட்டும் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC), மாநில நிதிக்குழு மானியம், தூய்மை பாரத இயக்கம் (SBM), ஜல் ஜுவன் மெசின்(உயிரிநீர் ஆதாரம்) திட்டம்(JJM), பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம் (PMAY), என பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது.

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.57.56 இலட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும், ஜல் ஜுவன் மெசின்(உயிரிநீர் ஆதாரம்) திட்டத்தின் கீழ் ரூ.47.57 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணியும், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணியும், உயிரிநீர் ஆதாரம் (ஜல் ஜுவன் மெசின்) திட்டத்தின் கீழ் ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணியும், பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணியும் என பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில் இன்று (25.09.2020) பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்ப்பட்ட ஆலம்பாடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.19.72 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமான பணியினையும், ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடு கட்டும் பணியினையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நாற்றாங்கால் வளர்ப்பு பணியினையும் ஆய்வு செய்தார்.

மேலும், அலுவலகம் மற்றும் பசுமை வீடுகளில் அரசு கூறியுள்ளபடி கழிப்பறை, மழைநீர் சேமிப்பு கிடங்கு போன்றவற்றை ஏற்படுத்திடவும், கட்டடங்கள் பணிகளையும் தரமானதாக கட்டிடவும், கட்டட பணிகளை விரைந்து முடிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் மரக்கன்றுகளை கிராம ஊராடசி வாரியாக பிரித்துக் கொடுத்து தேவையான இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கச் செய்திட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது செயற்பொறியாளர்(ஊ.வ.து) செந்தில் குமார், பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவர்கள் இளங்கோவன், ஆலயமணி, ஆலம்பாடி ஊராட்சி மன்ற தலைவர் கல்பனா சீனிாசன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.